முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி.

முன்னிலை :– **திரு.எம்.செல்வம், எம்.எல்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி, தூத்துக்குடி

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண் – 2/2023 இன்**

அசல் வழக்கு எண்– 98/2022

அரிகோபாலகிருஷ்ணன்

... மனுதாரர் / பிரதிவாதி

// எதிர் //

அருள்தாஸ்

... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு கடந்த 05.12.2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.சொரிமுத்து அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு கோப்பினைப் பரிசீலணை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக 05.09.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி இம்மனு மனுதாரரால், உரிமையியல் விசாரணை முறை சட்டம், கட்டளை 9 விதி 7 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M SELVAM

Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:55:45 +0530

2) **<u>மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி ஆவணத்தின் சுருக்கம்:–</u>**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் 05.09.2023 அன்று எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த விபரத்தை தன் வழக்கறிஞர் தனக்கு தெரியப்படுத்தியிருந்தார். அன்றைய தினம் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வெளியூருக்கு சிகிச்சைக்கு சென்றிருந்ததால் தன்னால் தனது வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை. எனவே, தாவா அசல் வழக்கில் தனக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். தாவா அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே, 05.09.2023 அன்று அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடவேண்டும். இல்லையெனில், மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும்.

3) **<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். தற்போது அசல் வழக்கானது வாதி தரப்பில் மேலும் சாட்சிகளை விசாரிப்பதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதிக்கு இந்நீதிமன்றம் பல வாய்ப்புக்கள் அளித்தும், மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகவுமில்லை; அவர் தரப்பில்

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:55:52 +0530

பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே, இந்நீதிமன்றம் 05.09.2023 அன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவினை பிறப்பித்துள்ளது. வழக்கு நடவடிக்கையை தாமதப்படுத்தவும், நீட்டிக்கவும், மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள வைஷ ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததற்கு சரியான காரணம் எதுவும் கூறவில்லை. மேலும் மனுதாரர்/பிரதிவாதி அவரது கோரிக்கையை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) **<u>இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>**

மனுதாரர் மனுவில் கோரியபடி, அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக 05.09.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

6) இம்மனுவின் மனுதாரரான பிரதிவாதி மீது, எதிர்மனுதாரரான வாதி காசோலையின் பேரில் சேர வேண்டிய தொகைக்காக அசல் வழக்கு எண்.98/2022 ஐ தாக்கல் செய்ததில் வழக்கு விசாரணைக்காக 05.09.2023 ல் வாய்தா இருந்தது.

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:56:00 +0530

05.09.2023 ல் பிரதிவாதியோ, பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞரோ ஆஜராகா நிலையில், பிரதிவாதி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, ஒருதலைப்பட்ச விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில், 05.09.2023 ல் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வெளியூருக்கு சிகிச்சைக்கு சென்றிருந்ததால், வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை என்றும், அசல் வழக்கில் மனுதாரர் ஆஜராகா நிலையில், ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மனுதாரருக்கு அசல் வழக்கில் நல்ல கட்சி உள்ளதாகவும், எனவே, அசல் வழக்கில் 05.09.2023 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கூறுகின்றார்.

7) எதிர்மனுதாரரான வாதி தரப்பில், வழக்கை காலதாமதம் செய்யவே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாரர் உரிய காரணங்களைக் கூறாத நிலையில், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணை செய்யப்படுகிறது.

8) அசல் வழக்கில் இந்த மனுதாரரான பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. 05.09.2023 ல் விசாரணைக்கு மனுதாரரான பிரதிவாதி அசல் வழக்கில் ஆஜராகா நிலையில், ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ரத்து செய்ய 22.09.2023 லேயே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் தான் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கூறுகின்ற நிலையில், காசோலையின் பேரில் பணம் வசூலிக்க அசல் வழக்கு தாக்கல்

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:56:08 +0530

செய்யப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கில் இம்மனுதாரரான பிரதிவாதிக்கு வழக்கை நடத்துவதற்கு மேலும் ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து இவ்வாறாக இந்த மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:56:45 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:—</u>**

இல்லை

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :—</u>**

இல்லை

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2023.12.13 17:56:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.